இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 17.08.2026

# பொய்யில் புரளும் விஜய் அரசு!

“இரண்டு மாத காலத்தில் அரசின் கருவூலத்துக்கு ரூ.15 ஆயிரம் கோடியைக் கொண்டு வந்துவிட்டோம்” என்று மார்தட்டிச் சொன்னார் நிதி அமைச்சர் மரிய வில்சன்.

“15 ஆயிரம் கோடி வந்தால், அது எந்தெந்த வகையில் எல்லாம் வந்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிக்க வேண்டும்” என்று கேள்வி எழுப்பினார் முன்னாள் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு.

அதற்கு இந்நாள் நிதி அமைச்சர் மரிய வில்சன் என்ன சொல்லி இருக்கிறார் தெரியுமா? “ரூ.15 ஆயிரம் கோடி வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்க்கப்படுகிறது என்று சொன்னாலே வந்தது தானே?” என்று சொல்லி இருக்கிறார். எவ்வளவு பெரிய பொய்யைச் சர்வசாதாரணமாகச் சொல்கிறார்கள் என்பது இதன் மூலமாகத் தெரிகிறதா?

**தங்கம் தென்னரசு எதிர்க் கேள்வி கேட்காமல் போயிருந்தால், மரிய வில்சன் சொன்னது தான் அனைத்து நாளிதழ்களிலும் தலைப்புச் செய்தியாக வந்திருக்கும். இத்தகைய பொய்களில் தான் விஜய் அரசு நாட்களை நீட்டித்துக் கொண்டு இருக்கிறது.**

ஆயத்தீர்வை மூலமாக ரூ.1500 கோடி வந்துள்ளதாம். மோட்டார் வாகன வரி மூலமாக ரூ.750 கோடி வந்துள்ளதாம். பத்திரப்பதிவு, முத்திரைத் தாள் மூலமாக ரூ.5000 கோடி வரப்போகிறதாம். இதை எல்லாம் வைத்துச் சொன்னாராம். இவை எல்லாம், மரிய வில்சன் கோட்டைக்கு வராமல் வீட்டிலேயே சும்மா இருந்தாலே வரும் வருமானங்கள். மாதம்தோறும் வழக்கமாக அரசாங்கக் கருவூலத்துக்கு வருகிறவை தான் இவை. இதில் த.வெ.க. ஆட்சி அறுத்த அறுப்பு என்ன? அதைச் சொல்லுங்கள்.

**‘கடன் வாங்கி விட்டார்கள், கடனை மட்டும் தான் வாங்கினார்கள், 30 விழுக்காட்டை அவர்கள் எடுத்துச் சென்று விட்டார்கள், அதைத் தடுத்தாலே அரசாங்க கஜானாவுக்கு பணம் வந்துவிடும், கடன் வாங்கத் தேவையில்லை’ என்று பெரிய பொருளாதார மேதையைப் போல பொது மேடைகளில் தேர்தலுக்கு முன்னால் கனைத்தார் விஜய். இவர் முதலமைச்சராக வந்ததும் என்ன செய்கிறார்? கடன் வாங்குகிறார். கடன் வாங்கப் போகிறார். அதை மட்டும் தான் இந்த இரண்டு மாதமும் செய்துள்ளார்.**

அவர் கேட்ட கேள்வியையே அவரைப் பார்த்துக் கேட்போம். ‘அவர்கள் எடுத்துச் சென்றதாக நீங்கள் சொல்லும் 30 விழுக்காட்டை அப்படியே விட்டிருந்தால் கூட நீங்கள் கடன் வாங்கத் தேவையில்லையே? அதை மீறி ஏன் கடன் வாங்குகிறீர்கள்?’ - இப்படி ஒரு கேள்விக்கு விஜய்யால் என்ன பதில் சொல்ல முடியும். ‘அட விடுங்க பாஸ்’ என்று வேண்டுமானால் சொல்வார். தங்கம் தென்னரசு கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல், சிரித்தாரே இன்றைய நிதி அமைச்சர் மரிய வில்சன் அதைப் போல விஜய் சிரிக்கலாம்.

வாய்க்கு வந்ததை எல்லாம் அடித்து விட்டார் விஜய் என்பதை இப்போது தான் மக்கள் உணரத் தொடங்கி இருக்கிறார்கள். அதிகாரம் இல்லாதபோது என்ன வேண்டுமானாலும் பேசலாம். அதிகாரத்தில், பொறுப்பில் உட்காரும் போதுதான் உண்மை நிலைமைகள் புரியும்.

‘நிதி நிலைமை மோசமாக உள்ளது, ஏராளமாக கடன் வாங்கி வைத்துவிட்டார்கள்’ என்று முந்தைய தி.மு.க. அரசு மீது தொடர்ந்து ஒரு பொய்யை நிதி அமைச்சர் மரிய வில்சன் சொல்லிவந்தார். வெள்ளை அறிக்கை வெளியிடப் போவதாக மிரட்டினார். வெள்ளை அறிக்கை வெளியிட்டார். தமிழ்நாட்டுக்கு எவ்வளவு கடன் இருக்கிறது என்ற எல்லாரும் தெரிந்த செய்தி தான் அந்த வெள்ளை அறிக்கையில் இருந்தது.

தான் சொன்ன பொய்யையும் அவரால் காப்பாற்ற முடியவில்லை. ‘மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் கடன் வாங்கிவிட முடியாது. அந்த உச்சவரம்புக்குள் தான் கடன் தொகை உள்ளது’ என்று அமைச்சர் மரிய வில்சனே ஊடகங்களின் முன் உண்மையை ஒப்புக் கொண்டார்.

**‘மாநிலங்களின் கடன் உச்சவரம்பை ஒன்றிய அரசுதான் நிர்ணயிக்கிறது. ஒன்றிய அரசின் அனுமதி இல்லாமல் மாநிலங்களால் எந்தக் கடனும் வாங்க முடியாது. அவர்கள் அனுமதித்த அளவில் தான் தமிழ்நாடு அரசின் கடன் அளவு இருக்கிறது. அதில் எந்த மாற்றமும் இல்லை’ என்று நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சித்திக், அமைச்சரை அருகில் வைத்துக் கொண்டே சொல்லி விட்டார்.**

‘கடன் வாங்கி வைத்துவிட்டார்கள்’ என்று அமைச்சர் மரிய வில்சன் கட்டமைத்த பொய்யை அவரே உடைத்து விட்டார்.

‘முந்தைய ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் சமூகநலன் சார்ந்தது தான். அதைக் குறை சொல்லவில்லை. எந்தத் திட்டத்துக்கும் தேவையில்லாமல் நிதி செலவிடப் பட்டதாகக் கண்டறியவில்லை’ என்றும் அமைச்சர் மரிய வில்சன் அப்போது ஒப்புக் கொண்டார். அவர்கள் கட்டமைத்த பொய்யை அவர்களே உடைத்தும் விட்டார்கள்.

**“பொய்யுடை ஒருவன்**
**சொல் வன்மையினால்**
**மெய் போலும்மே மெய் போலும்மே”**

- என்பது அதிவீரராம பாண்டியர் (வெற்றிவேற்கை) எழுதிய வரிகள் ஆகும். பேசும் ஆற்றல் கொண்டவர், தனது பேச்சால் பொய்யை உண்மை என்பதைப் போல எடுத்துச் சொல்லி விடுவார் என்பது இதன் பொருள்.

**விஜய் தனது வெத்து வசனங்கள் மூலமாக கட்டமைத்தது அனைத்தும் பொய்கள் மட்டுமே என்பது நாளுக்கு நாள் வெளிச்சத்துக்கு வருகிறது. அதனால் அவரும் அசிங்கப்பட்டு நிற்கிறார்.**

●●

### கோவையை அடுத்து சென்னையிலும்

# பிளஸ் 2 மாணவர் அடித்துக் கொலை!

**சென்னை,ஆக.17-**

**சென்னை திருவொற்றியூரில் அரசு பள்ளி வளாகம் அருகே ஒட்டிய பிளஸ் 2 படிக்கும் மாணவர் தனுஷ் நேற்று அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

திருவொற்றியூர் அருகே உள்ள விம்கோ நகரில், ஜெய் கோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளி மைதானத்திற்கு அருகே, விம்கோ நகரைச் சேர்ந்த 19 வயதான 12ஆம் வகுப்பு மாணவர் தனுஷ் கொலை செய்யப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டார்.

அதே பள்ளியில் படித்த முன்னாள் மாணவர்களால் தனுஷ் அடித்துக் கொலை செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

பள்ளியின் பின்புறத்தில் காயங்களுடன் கிடந்த மாணவன் தனுஷின் உடலை கைப்பற்றி, சம்பவம் குறித்து காவல் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பள்ளி அருகே பட்டப்பகலில் நடந்த இந்த கொலை சம்பவத்தால் மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.



ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களை நேற்று சந்தித்து, திருச்செந்தூர் செல்லும் பக்தர்களுக்கு நேரடிப் போக்குவரத்தை வழங்கும் தூத்துக்குடி – ஆறுமுகநேரி ரயில் பாதையை விரைந்து நிறைவு செய்யக் கோரும் கடிதங்களை கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி வழங்கி, மேலும், தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் சாலை மேம் பாலங்கள் மற்றும் பாதுகாப்பான பாதசாரி கடப்புகள் உள்ளிட்ட உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுமாறும், பயணிகளின் வசதிக்காகத் தூத்துக்குடி – தாம்பரம் இடையிலான சிறப்பு ரயிலை தினசரி சேவையாக மாற்றியமைக்குமாறும் அமைச்சகத்தை வலியுறுத்தினார்.

### மாநிலத்தின் நிதிச் சுமையை அதிகரிக்கும் எம்.எம்.டி.ஆர்.

### சட்டத்திருத்த மசோதா மக்களவையில் நிறைவேற்றி 24 மணி நேரம் ஆகியும்

# முதல்வர் இன்னும் எத்தனை நாட்களுக்கு அமைதி காக்கப் போகிறார்?

### கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. ட்விட்டர் பதிவு!

சென்னை, ஆக. 17-

நாடாளுமன்ற கழகக்குழுத் தலைவரும் கழக துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி ட்விட்டர் பதிவு வருமாறு:

ஆகஸ்ட் 10ஆம் தேதி அறிமுகப்படுத்தப்பட்ட MMDR சட்டத் திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 24 மணி நேரம் கடந்து விட்டது.

தமிழ்நாட்டைப் பொருளாதார இறையாண்மை கொண்ட மாநிலமாக மாற்றுவோம் என்று தேர்தல் வாக்குறுதி அளித்ததை மறந்துவிட்டதால் த.வெ.க. அரசு அமைதி காக்கிறதா?

இச்சட்டத் திருத்தம் மாநிலத்தின் நிதிச்சுமையை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், மாநில அரசின் அதிகார வரம்புக்குள் உள்ள நிலத்தின் மீது ஒன்றிய அரசு அதிகாரம் செலுத்த முயல்வதும் கூட்டாட்சித் தத்துவத்திற்கு முற்றிலும் முரணானது.

இவ்வளவு தீவிரமான ஒரு பிரச்சினை தொடர்பாக முதலமைச்சர் இன்னும் எத்தனை நாட்களுக்கு அமைதி காக்கப் போகிறார்?

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு ஒன்றிய அரசு செவி சாய்ப்பதில்லை!

# மோடியும், அமித்ஷாவும் நாடாளுமன்றத்துக்கு வருவதே இல்லை!

### மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா குற்றச்சாட்டு!

சென்னை, ஆக. 17 -

பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் நாடாளுமன்றத்துக்கு வருவதே இல்லை என்று மாநிலங்களவை தி.மு.க. குழுத்தலைவர் திருச்சி சிவா குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய கழக துணைப் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை தி.மு.க. குழுத்தலைவருமான திருச்சி சிவா,



ஒன்றிய பா.ஜ.க. அரசின் பிடிவாதத்தால் நாடாளுமன்ற கூட்டத்தொடர் முழுமையாக முடங்கியதாக குற்றம் சாட்டினார். பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் நாடாளுமன்றத்துக்கு வருவதே இல்லை என்று விமர்சித்தார். எதிரக் கட்சிகளின் கேள்விகளுக்கு செவிசாய்க்காமல் ஏற்கனவே தயாரித்து வைக்கப்பட்டுள்ள அறிக்கையையே ஒன்றிய அமைச்சர்கள் வாசித்ததாகவும் திருச்சி சிவா குற்றம் சாட்டினார். நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்பதுதான் தி.மு.க.வின் நிலைப்பாடு என்றும் திருச்சி சிவா குறிப்பிட்டார்.

பேட்டியின் போது கவிஞர் சல்மா எம்.பி. உடனிருந்தார்.

### நியாயமான தொகுதி மறுசீரமைப்புதான் தி.மு.க.வின் கொள்கை

# சென்னையில் சொத்துவரி உயர்வை நிரந்தரமாக கைவிடாவிட்டால் தி.மு.க. சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

### அமைச்சர் நிர்மல்குமார் அவதூறு பேச்சுக்கு பதிலடி! – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!

**சென்னை, ஆக.17 –**

**பச்சையாகப் பொய் சொல்கிறார் நிர்மல் குமார் என்றும், RSS, BJPயில் இருந்த நிர்மல் குமாருக்கு மற்றவர்களைப் பற்றி பேச யோக்கியதை கிடையாது என்றும், சென்னையில் சொத்து வரி உயர்வை முழுமையாகக் கைவிடாவிட்டால் தி.மு.க. சார்பில் போராட்டம் நடைபெறும் என்றும் அமைச்சர் நிர்மல் குமாரது அவதூறு பேச்சிற்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பதிலடி கொடுத்துள்ளார்.**

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

அமைச்சர் நிர்மல் குமாருக்கு வாயில் உண்மையே வராது. அதற்கு காரணம், அவர் ஆர்.எஸ்.எஸ்ஸில் இருந்தவர். RSS மற்றும் BJPயில் இருந்தவருக்கு மற்றவர்களைப் பற்றி விமர்சனம் செய்வதற்கு எந்த யோக்கியதையும் கிடையாது. நாங்கள் தொடக்கத்தி லிருந்தே பாஜகவை எதிர்த்தவர்கள்; இன்றும் அதே நிலைப்பாட்டில்தான் இருக்கிறோம்.

நிர்மல் குமார் ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு மாதிரி பேசக்கூடியவர். அவர் ஆர்.எஸ்.எஸ்ஸில் இருந்தார், அதிமுகவில் இருந்தார்; இப்போது த.வெ.க. கட்சியில் இருக்கிறார். இன்னும் இந்த ஆட்சி முடிவதற்குள் அவர் எந்தக் கட்சிக்கு போவார் என்று தெரியவில்லை. புதுசாக தனுஷ் ஒரு கட்சி ஆரம்பிக்கப் போகிறார், அண்ணாமலை ஒரு கட்சி ஆரம்பிக்கப் போகிறார் என்றெல்லாம் பேசுகிறார்கள்.

இப்படிப் புதிதாக யார் கட்சி ஆரம்பித்தாலும், உடனே போய் முதலில் கையெழுத்துப் போட்டு உறுப்பினர் அட்டை வாங்கி வைத்துக்கொள்வது சிலருக்குப் பாரம்பரியமான பழக்கம். அதில் முதன்மையானவர்தான் இன்றைக்கு இருக்கக்கூடிய நிர்மல் குமார். அதேபோல ஆதவ் அர்ஜுனா போன்றவர்கள் எல்லா கட்சிக்கும் சுற்றிவிட்டுப் போவார்கள்.



ஆகையினால், அவர்கள் வைக்கும் வாதம் சரியாக இருக்க வேண்டும்.

கடந்த முறை பாராளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை மசோதா கொண்டுவரப்பட்டபோது, திமுகவால் தான் அது தோற்கடிக்கப்பட்டது. எங்கள் தலைவர் தளபதி அவர்கள் அன்று கருப்புச் சட்டை அணிந்து, அந்தச் சட்ட மசோதாவையே எரித்து எதிர்ப்பைப் பதிவு செய்தார். அதற்குப் பிறகுதான் அது தோற்கடிக்கப்பட்டது என்பதுதான் உண்மை.

தி.மு.க. மிகத் தெளிவாகச் சொல்லி விட்டது-நாங்கள் கொடுத்த சில திருத்தங்களை மசோதாவில் சேர்த்து வைத்தால், அதை ஆதரிப்பதா இல்லையா என்பதைப் பார்த்துதான் முடிவு செய்ய முடியும். ஆனால், இவர்கள் ஊழலை மறைப்பதற்காகத் திரும்பத் திரும்பத் திசை திருப்புகிறார்கள்.

கோவையில் மாணவர் கொலை சம்பவம் நடந்துள்ளது. அன்று தி.மு.க. ஆட்சியில் அண்ணா பல்கலைக்கழகத்தில் நடந்த சம்பவத்தில் 85 நாட்களுக்குள் தண்டனை பெற்றுத் தந்து தவறு செய்தவர்களை உள்ளே சிறைக்கு அனுப்பினோம். ஆனால், தூத்துக்குடி பெண் பாதிக்கபட்ட விவகாரத்தில், அவர்கள் கட்சியினரே சம்மந்தப்பட்டிருப்பதாக புகார் அளித்தும் 100 நாட்கள் ஆகியும் அதற்கு இன்னும் பரிகாரம் கிடைக்கவில்லை; கேசும் போடவில்லை, ஒன்றும் செய்யவில்லை.

நேற்று ஒரு மாநாடு நடந்தது. எவ்வளவு பெரிய மாநாடாக இருந்தாலும், ‘நான்காவது தூண்’ (FOURTH PILLAR) எனப்படும் பத்திரிகையாளர்களுக்கு முதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஆனால், பத்திரிகையாளர்களையே உள்ளே விடவில்லை. அங்கு என்ன நடந்தது என்று யாருக்குமே தெரியவில்லை; முதலமைச்சரே பேசவில்லை. முதலீட்டாளர்கள் எல்லாம் வந்துவிட்டதாக இவர்கள் சொல்கிறார்கள். ஆனால், எங்கள் தலைவர் அன்றைக்குக் கொண்டுவந்து போட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், இரண்டாம் கட்டத்திற்கான தொகையைப் போட்டிருக்கிறார்கள்; அவ்வளவு தான்.

அப்படி இருக்கும்போது பத்திரிகையாளர்களை அனுமதித்தால் என்ன? மக்களுக்கு உண்மைகள் வெட்டவெளிச்சமாகத் தெரிந்துவிடும் என்பதற்காகவே இந்த ரகசியம். பத்திரிகையாளர்களையே அனுமதிக்காமல் ஒரு கூட்டத்தை நடத்துவது தமிழ்நாட்டிலேயே இதுதான் முதல் முறை.

அதேபோல, சென்னையில் சொத்து வரி/வீட்டு வரி பயங்கரமாக உயர்த்தப்பட்டுள்ளது. இன்றைக்குக் கார்ப்பரேஷனில் ‘சுய மதிப்பீடு’ (SELF DECLARATION) மூலம் வரி போடுகிறார்கள். அபார்ட்மெண்டில் 50 வீடுகள் உள்ள இடத்தில் இரண்டு பேருக்குத்தான் மதிப்பீடு செய்தார்கள் என்று பச்சையாக பொய் சொல்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் தனித்தனி மதிப்பீடு மற்றும் பட்டா இருக்கும். அப்படி தவறாக இருந்தால் CMDA மூலம் அந்த கட்டடங்களை இடிக்க வேண்டியதுதானே? அந்த அதிகாரம் உங்களுக்கு இருக்கிறதே!

இப்படிப் பொய் பேசும் அமைச்சர்கள் தான் இன்றைக்கு இருக்கிறார்கள். நேற்றைய தினம் எங்கள் கட்சியின் தென்சென்னை மாவட்டச் செயலாளரும் முன்னாள் மேயருமான மா.சுப்பிரமணியம் கண்டன அறிக்கை வெளியிட்டு, மக்கள் மத்தியில் பெரிய கொதிப்பு ஏற்பட்ட பிறகு, தற்போது தற்காலிகமாக அதை நிறுத்தி வைப்பதாக சொல்கிறார்கள். நிரந்தர மான தீர்வை இவர்களால் சொல்ல முடியவில்லை. உள்ளாட்சித் துறை அமைச்சரும், அதிகாரிகளும் இதுபற்றி வாய் திறக்கவில்லை. இந்த வரி உயர்வைக் கைவிடாவிட்டால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மிகப்பெரிய ஆர்ப்பாட்டத்தை நடத்துவோம்.

தொகுதி மறுசீரமைப்பு (DELIMITATION) மசோதாவைப் பொறுத்தவரை, திமுக ‘FAIR DELIMITATION’ என்ற நிலைப்பாட்டி ல்தான் இருக்கிறது. தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சர் கொண்டுவந்த தனித்தீர்மானத்தை திமுக ஏற்றுக்கொண்டது. நியாயமான தொகுதி மறுசீரமைப்பு என்பதுதான் எங்கள் கொள்கை. நாடாளுமன்றத்தில் சட்ட திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று சொன்னோம்.

அவர் சர்க்காரியா கமிஷனைப் பற்றியெல்லாம் பேசுகிறார்; அப்போது அவர் பிறந்திருக்கவே மாட்டார். சர்க்காரியா கமிஷனுக்குச் சவால் விட்ட ஒரே தலைவர் எங்கள் தலைவர் கலைஞர் மட்டும் தான். அதற்குப் பிறகு பல ஆண்டுகள் எம்.ஜி.ஆர் ஆட்சி நடந்தது; அவர்களால் ஒரு வழக்காவது போட முடிந்ததா? 2001இல் இரவோடு இரவாகக் கலைஞரைக் கைது செய்தார்களே, அதற்குப் பிறகு 15 ஆண்டுகள் அவர்கள் ஆட்சியில்தான் இருந்தார்கள்; ஒரு வழக்கையாவது நிரூபிக்க முடிந்ததா? இதெல்லாம் வரலாறு தெரிந்து பேச வேண்டும்.

அவர் நேத்துதான் கட்சி ஆரம்பித்து வந்திருக்கிறார். நான் விஜய்க்கு ஒரு அறிவுரை சொல்வதானால்—பல கட்சிகளுக்குச் சென்று வந்த இதுபோன்ற ஆட்களைத் தயவுசெய்து பக்கத்தில் சேர்க்காமல் இருப்பது அவருக்கு நல்லது. ‘கூடா நட்பு கேடாய் முடியும்’ என்பதைப் போல, இந்த ஆட்சிக்கு கேடு இவர்களால் தான் வரப்போகிறது.

இவ்வாறு அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.